தேதி:-01.03.2021 **SESSIONS CASE NO**.208/2017 **P.W** -3

**(சரவணன்)**

**குறுக்குவிசாரணை:-**

அ.சா.4 எனக்கு தகவல் சொல்லும் போது மாலை 5 மணிஇருக்கும். நான் அப்போது துவரிமான் கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். அ.சா.4 ஐ நான் மாலை 5 அல்லது 5.15 மணியளவில் பார்த்தேன். நானும், அ.சா.4 ம் கிராமநிர்வாக அலுவலரான அ.சா.1 யிடம் போனோம். அப்போது மாலை 5.30 மணி இருக்கும். அப்போது நாங்கள் இருவரும் எக்ஙளுக்குத் தெரிந்த விபரங்களை அ.சா1 யிடம சொன்னோம். அவர் எழுதிக் கொண்டு எங்களிடம் கையொப்பம் பெற்றாரா என்றால் இல்லை. நாங்கள் சம்பவஇடத்திற்குப் போகும் போது மாலை 6 மணி இருக்கும். நாங்கள் காவல்நிலயத்திற்கு சென்றோமா என்றால் நானும், அ.சா1 ம்சென்றோமட. அப்போது இரவு சுமார் 8 மணி இருக்கும். சம்பவஇடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் இடையில் சுமார் 8 கி.மீ தூரம் இருக்கும். நானும், அ.சா.1 ம் போலிசாருடன் மீண்டும் சம்பவஇடத்திற்கு சென்றோம். நானும், அ.சா.1 ம் இருசக்கரவாகனத்தில் சுமார் 15 நிமிடத்தில் கிளம்பிவிட்டோம். சம்பவஇடம் போகும் போது இரவு சுமார் 8.30 மணிஇருக்கும். நாங்கள் சென்ற சுமார் 10 நிமிடத்தில் போலிசாரும் சம்பவஇடத்திற்கு வந்துவிட்டார்கள். நானும், அ.சா.1 ம் காவல்நிலையத்திற்கு சென்றவுடன் புகார் கொடுத்துவிட்டோம். புகாரில் நான் சாட்சிகையொப்பம் இட்டேனா என்றால் ஞாபகமில்லை. நான் முதுநிலை அறிவியல் பட்டம் பெற்றுள்ளேன். போலிசார் இரவு சுமார் 8.45 மணியளவில் சம்பவஇடத்தில் என்னை விசாரித்தார்கள். என் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.4 க்கு எங்கள் தோட்டத்து காவலர் ஆறுமுகம் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு தோப்பில் கொன்றுபோட்டிருக்கிறார்கள் என்றும், யார் என்று தெரியவில்லை என்றும் மூன்று பேர்கள் ஓடினார்கள்

என்றும் அ.சா.4 என்னிடம் சொன்னதாக போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். போலிஸ்விசாரணையில் நானும், அ.சா.1 மற்றும் 4 மற்றும் அ.சா.1 ன் உதவியாளர் ஆகியோரும் சம்பவஇடத்திற்குப் போய் பார்த்ததாக சொல்லியுள்ளேன். அ.சா.2, சாட்சி ஆறுமுகம் அங்கு இருந்தார்கள் என்று போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். அசா.2 மற்றும் மேற்படி ஆறுமுகம் ஆகியோருடன் சம்பவஇடத்திற்குச் சென்று பேசினேனா என்றால் எப்படி நடந்தது என்பதைக் கேட்டேன். இறந்து போனவரின் கையில் s.k. வாள்முனை என்று பச்சை குத்தியிருந்ததாகவும், அவரது பேண்ட் பாக்கெட்டில் ஓட்டுநர் உரிமம் இருந்தகவும் அதில் சாகுல்ஹமீது என்ற பெயர் இருந்தாகவும் போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். பேண்ட்டில் எந்த பாக்கெட்டில் இருந்து ஓட்டுநர்உரிமத்தை போலிசார் எடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை, அதை நான் வாங்கி பார்க்கவில்லை. மேறப்டி ஓட்டுநர்உரிமம் அசலா, அல்லது ஒளிநகலா என்பது எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் மேற்படி ஆறுமுகம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றும் அதனடிப்படையில் நாங்களும் சம்பவஇடம் செல்லவில்லை என்றும் அ.சா.1 ம் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

**(ரமணன்)**

**குறுக்குவிசாரணை:-**

நான் பட்டயம் பெற்றுள்ளேன். போலிசார் என்னை சம்பவஇடத்தில் விசாரித்தார்கள். மறுநாள் காவல்நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள். இரண்டுமுறையும் விசாரிக்கும் போது போலிசார் எழுதிக் கொண்டார்களா என்றால் ஞாபகமில்லை. போலிஸ்விசாரணையில் 26.09.2014 அன்று மாலை 5 மணியளவில் எங்கள் தோட்டத்து காவலர் ஆறுமுகம் கைபேசி மூலம் எனக்கு தகவல் சொன்னதாகவும், மூன்று பேர் சேர்ந்து ஒருவரை அடித்துக் கொன்றுவிட்டதாகவும், இறந்தவர தோட்டத்தில் கிடப்பதாக ஆறுமுகம் என்னிடம் சொன்னதாக போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி ஆறுமுகம் எங்கள் தோட்டத்தில் சுமார் 25 , 30 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார். தற்போதும் வேலை செய்து வருகிறார். அவரது கைபேசி எண்ணை போலிசாரிடம் சொன்னேன். என் கைபேசிஎண்ணையும் சொன்னேன். கைபேசி அழைப்பு பதிவுகளை போலிசார் பார்வையிட்டார்களா என்றால் இல்லை. மேறப்டி ஆறுமுகத்தை பார்த்தவுடன் கொலையாளிகள் ஓடிவிட்டதாக ஆறுமுகம் என்னிடம் சொன்னதாக போலிஸ்விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் வீட்டில் இருக்கும் போது ஆறுமுகம் எனக்குத் தகவல் சொன்னார். எங்கள் வீட்டில் இருந்து அ.சா.1 அலுவலகம் சுமார் 1 கி.மீ தூரத்திலுள்ளது. அப்போது அ.சா.3 வயலில் இருந்தார். அ.சா.3 என்னை வந்து பார்க்கும் போது நேரம் என்னயிருக்கும் என்றால் நான்தான் அவரை போய் வயலில் பார்த்தேன். நான் அ.சா.3 ஐ பார்க்கும் போது மாலை சுமார் 5.30 அல்லது 5.45 மணி இருக்கும். நானும், அ.சா.3 ம் அ.சா.1 அலுவகலத்திற்கு இருசக்கரவாகனத்தில் போனோம். அப்போது மாலை சுமார் 6 மணி இருக்கும். அ.சா.1 யிடம் நான் தகவல் எதுவும் சொல்லவில்லை. அ.சா.3 தான் சொன்னார். நான் தகவல் சொல்லாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் அ.சா.3

மூத்தவர் என்பதால் நான் எதுவும் சொல்லவில்லை. அ.சா.1 அலுவலகத்தில் இருந்து சுமார் 10 நிமிடத்தில் சம்பவஇடத்திற்கு கிளம்பிவிட்டோம். மேற்படி ஆறுமுகம் என்னிடம் கூறியது உண்மையா என்பதை சம்பவஇடத்தில் விசாரணை செய்து தெரிந்து கொள்ள நான் நினைக்கவில்லை. நான், அ.சா.1, அவரது உதவியாளர் மற்றும் அ.சா.3 ஆகியோர் சம்பவஇடத்திற்குச் சென்று பார்த்த போது ஒருவர் முகம் சிதைந்த நிலையில் இறந்து கிடந்ததாக போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். நாங்கள் சம்பவஇடத்திற்குப் போகும் போது எங்களைத் தவிர மேலும் ஆறு பேர் இருந்திருப்பார்கள். நாங்கள் சம்பவஇடம் போகும் போது அ.சா.1 இறந்து போன நபரை பற்றி அருகில் இருந்த நபர்களை விசாரித்து அவரைப்பற்றிய விபரம் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதால் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக போலிஸ்விசாரணையில் சொன்னேன். அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு நேரில் தெரியாது. புகார் கொடுப்பதற்கு முன்பும், பிறகும் அ.சா.1 என்னை விசாரிக்கவில்லை. இறந்து போனவரின் ஓட்டுநர்உரிமத்தை நான வாங்கி பார்க்கவில்லை. போலிசார் எடுத்ததைப் பார்த்தேன். அந்த உரிமம் அசலா அல்லது ஒளிநகலா என்று தெரியாது. ஓட்டுநர் உரிமத்தைப் பார்த்து இறந்து போனவர் சாகுல்ஹமீது என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம் என்று போலிஸ்விசாரணையில் சொன்னேன். இறந்து போனவரின் விபரம் ஏற்கனவே காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டு போலிசார் சம்பவஇடம் சென்று பின்னிடம் புகார் கொடுப்பதற்காக போலிசார் ஆலோசனையின் பேரில் என்னை சாட்சியாக காட்டி போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்தலும் மேற்படி ஆறுமுகம் எனக்கு எந்த

தகவலும் கொடுக்கவில்லை என்றும் நாங்களும் சம்பவஇடம் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசாரும் இந்த வழக்கும் சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.